**DEPOSITION OF WITNESS.**
**(Chapter XXIII, Cr.P.C)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, BODINAYAKANUR.**

**Case No.** **STC.No.245/2023**

Deposition of **PW–1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | உமாதேவி | **Age** | : | 65 |
| **Father's / Husband Name** | : | சுருளிராஜ் | **Religion** | : | இந்து |
| **Village** | : | போடிநாயக்கனூர் | **Calling** | : | இல்லத்தரசி |
| **Taluk** | : | போடிநாயக்கனூர் | **Caste** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **16 day October 2025**

எதிரி ஆஜர் . எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

2) எதிரி எனக்கு நெருங்கிய நண்பரும் இல்லை உறவினரும் இல்லை என்றால் சரிதான். எதிரிக்கு வட்டிக்கு கடன் கொடுத்தேனா கைமாற்று கடனாக கொடுத்தேனா என்றால் கைமாற்று கடனாக கொடுத்தேன். நான் யாரிடமாவது கைமாற்று கடன் வாங்கியுள்ளேனா என்றால் இல்லை. எதிரியைத் தவிர வேறு யாருக்கும் கைமாற்று கடன் கொடுத்துள்ளேன்னா என்றால் இல்லை . நான் என் உறவினர்களுக்கு கூட கொடுத்தது இல்லை என்றால் சரிதான். பொதுவாக கைமாற்று கடன் ஒருநாள் இரண்டு நாட்களில் திருப்பி கொடுக்கப்பட வேண்டும் என்றால் எதிரி என் பக்கத்து வீட்டுக்காரர் சிறுக சிறுக உதவி செய்தேன். ஆறு மாதங்கள் கழித்து திரும்ப கொடுத்தால் அது கைமாற்று கடனாக கருதலாமா என்றால் இவ்வாறு செய்வார்கள் என்று நினைத்து இருந்தால் கொடுத்திருக்க மாட்டேன். எதிரியை எனக்கு அவர் சிறுவயதில் இருந்தே எனக்கு தெரியும் அவரது அப்பா தாத்தா காலத்திலிருந்து பழக்கம்.

3) சுமார் 30 ஆண்டுகளாக தெரியும். எதிரி பூக்கட்டி பூ விற்கும் தொழில் செய்து வருகிறார் என்றால் சரிதான். எதிரி ஒரு நாள் எவ்வளவு வருமானம் சம்பாதித்து வருகிறார் என்றால் அந்த விபரம் எனக்கு தெரியாது.பொதுவாக கடன்

கொடுப்பவர்கள் கடன் வாங்குபவர் இடம் அவருக்கு திரும்பச் செலுத்தும் வசதி உள்ளதா என பார்த்து கடன் கொடுப்பார்கள் என்றால் நான் மனிதாபிமான அடிப்படையில் உதவி செய்தேன். இலவசமாக கொடுத்தேனா என்றால் கைமாற்று கடனாக கொடுத்தேன் கைமாற்று கடன் என்றால் இலவசம் தான். நான் மார்க்கெட்டில் கந்து வட்டி கொடுத்து வருகிறேன் என்றால் சரி அல்ல.

4) நான் 100 ரூபாய் கடன் கொடுத்தால் பத்து ரூபாய் எடுத்துக் கொண்டு மீதி 90 ரூபாய் கொடுத்து மீதமுள்ள தொகையை 100 நாட்களில் திருப்பி செலுத்த வேண்டும் என சொல்வேன் என்று சொன்னால் சரியல்ல.எனக்கு என்ன வருமானம் வருகிறது என்றால் என் கணவருக்கு ஓய்வூதியம் வருகிறது. ஓய்வூதியம் எவ்வளவு வருகிறது என்றால் என் கணவருக்கு தான் தெரியும் .என் கணவருக்கு வரும் ஓய்வூதியம் எங்களை பராமரிக்க மட்டுமே போதுமாக இருக்குமா என்றால் என் பெண் பிள்ளைகள் எனக்கு உதவி செய்வார்கள். என் வங்கி கணக்கில் எவ்வளவு பணம் உள்ளது என்றால் மாத மாதம் செலவுக்கு கொடுக்கும் தொகை அதில் இருக்கும். நான் எதிரிக்கு எனது நகையை அடமானம் வைத்து ஆறு லட்சம் ரூபாய் கடன் கொடுத்தேன்.

5) அந்த நகைகளுக்கு நான் எவ்வளவு வட்டி செலுத்தி வருகிறேன் என்றால் அரசுடமையாக்கப்பட்ட வங்கியில் தங்க நகைகளுக்கு விதிக்கும் வட்டி தான் நான் செலுத்தி வருகிறேன் அது எவ்வளவு என்று எனக்கு தெரியாது. நான் அடமானம் வைத்த நகைகள் குறித்த ரசீதை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஞாபகம் இல்லை. பொதுவாக கைமாற்று கடன் கொடுப்பவர்கள் தனது நகையை அடமானம் வைத்து தான் வட்டிகட்டி அடுத்தவருக்கு கைமாற்றுக் கடன் கொடுக்க மாட்டார்கள் என்று சொன்னால் எதிரி தனது குடும்ப சூழ்நிலையை சொல்லி கடன் கேட்டதால் என்னிடம் பண வசதி இல்லாததால் வீட்டிற்கு தெரியாமல் நகைகளை வைத்து கடன் கொடுத்தேன் . நகைகளை திருப்பி விட்டேனா என்றால் இல்லை.

6) வட்டிகட்டி வருகிறேன். நான் நகைகளை அடகு வைக்கவில்லை என்றும் நகைகளை அடகு வைத்து வட்டிகட்டி வருவதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. எதிரி இதற்கு முன்பு என்னிடம் கைமாற்று கடன் வாங்கியுள்ளாரா என்றால் ஆமாம் கொடுத்து கொடுத்து வாங்கியுள்ளேன். அதற்கு முன்பு ரூபாய் 5000,10000 கொடுத்து வாங்கினேன். பூ வியாபாரம் செய்வதற்காக கேட்பார் அவர் தகுதி அதுதான் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது .எதிரிக்கு ஆறு லட்சம் ரூபாய் கடன் வாங்க வேண்டிய அவசியமும் இல்லை.அதை கொடுக்கும் அளவிற்கு தகுதியும் எனக்கு இல்லை என்றால் சரியல்ல.

7) எதிரி என்னிடம் என்ன சொல்லி கடன் கேட்டார் என்றால் எதிரியின் மனைவியுடன் அவருக்கு பிரச்சனை ஏற்பட்டதால் அந்த வழக்கை பார்க்க வேண்டும் என்பதற்காக என்னிடம் பணம் கேட்டார். எதிரியிடம் எப்போது எப்படி கொடுப்பாய் என நான் கேட்கவில்லை என்றால் எதிரி கொடுத்து விடுவதாக சொன்னார். எதிரி என்னிடம் பணம் வாங்கிய பிறகு காசோலை கொடுத்தாரா ,அல்லது நான் காசோலை வாங்கிக் கொண்டு பணம் கொடுத்தேனா என்றால் எதிரி என்னிடம் பணம் வாங்கிக் கொண்டு காசோலை கொடுத்தார். பணம் கொடுத்த அன்றே காசோலை வாங்கி விட்டேன் என்றால் இல்லை. எப்போது காசோலை வாங்கினேன் என்றால் பணம் வாங்கி திருப்பி தரவில்லை அதனால் பிரச்சனை ஏற்பட்டது அதன் பிறகு தான் காசோலை கொடுத்தார்.

8) நான் சொன்னது போல் சொன்ன விதத்தில் எதிரிக்கு கடன் கொடுக்கவில்லை என்றும் எதிரி என்னிடம் கடன் வாங்கி காசோலை கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.நான் கந்து வட்டிக்கு பணம் கொடுக்கும் போது காசோலை வாங்கிக் கொண்டுதான் பணம் கொடுப்பேன் என்றால் நான் கந்து வட்டிக்கு பணம் கொடுக்க மாட்டேன். எதிரி என்னிடம் ஒரு முறை 20,000 மற்றொரு முறை 30,000 பணம் வாங்கினார் என்றும் அதனை திரும்ப செலுத்தி விட்டார் என்றும் சொன்னால் சரியல்ல. எதிரியிடம் கையொப்பம் மற்றும் வாங்கிக் கொண்ட காசோலையை வைத்து வட்டி

கூடுதலாக கேட்டு இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. காசோலையில் உள்ள மற்ற விபரங்கள் யார் எழுதியது என்றால் அவர்தான் எழுதிக் கொடுத்தார்.

9) இரண்டு காசோலைகளில் உள்ள எழுத்துக்களிலும் வித்தியாசம் உள்ளது என்றால் எனக்கு தெரியவில்லை. ஒரே நாளில் கொடுக்கப்படும் காசோலைகளில் இரண்டு வித்தியாசமான எழுத்துக்கள் இருக்க வாய்ப்பு இல்லை என்றால் சரியல்ல.எதிரியிடம் ஏன் காசோலையாக கொடுக்கிறாய் பணமாக கொடுக்கவில்லை என கேட்டதற்கு அவரது வங்கிக் கணக்கில் பணம் இருப்பதாகச் சொன்னார்.காசோலை எண் 000004 என்ற காசோலை பணமின்றி திரும்பிய பிறகு ஒரு மாதத்திற்குள் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரியல்ல. இரண்டு காசோலைகளும் பணமின்றி திரும்பிய பிறகுதான் நான் இரண்டு காசோலைகளுக்கும் சேர்த்து ஒரே வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான்.

10) அந்த அறிவிப்பை 09.11.2022-ம் தேதி அனுப்பியுள்ளேன் என்றால் சரிதான். முதல் காசோலை திரும்பிய பிறகு எதிரியிடம் அது குறித்து நான் பேசவில்லை என்றால் சரியல்ல, பேசினேன் மீண்டும் பணம் இருப்பதாக சொன்னதால்தான் இரண்டாவது காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்தேன். இந்த விபரத்தை நான் புகாரிலோ வழக்கறிஞர் அறிவிப்பிலோ எனது முதல் விசாரணையிலோ சொல்லவில்லை என்றால் அந்த விபரம் வழக்கறிஞருக்கு தான் தெரியும். நான் முறைப்படி காசோலை தொகையை கேட்டு அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரியல்ல. எனது அறிவிப்பில் காசோலை என்ற வார்த்தையை கூட பயன்படுத்தவில்லை என்றால் அந்த விபரம் வழக்கறிஞருக்கு தான் தெரியும். நான் 12 ஆம் வகுப்பு படித்துள்ளேன்.

11) எதிரி என்னிடம் ஏற்கனவே வாங்கிய கடனுக்கு பணம் திரும்ப செலுத்தியதற்கான ஆதாரம் தன்னிடம் இருப்பதாகச் சொன்னால் ஏற்கனவே என்னிடம் வாங்கிய தொகையை தான் அவ்வாறு திரும்பச் செலுத்தினார். எதிரி

என்னிடம் ரூபாய் 6 லட்சம் பணம் வாங்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. 17.11.2022 ஆம் தேதி எதிரி என் மீது காவல் நிலையத்தில் காசோலையை வைத்துக்கொண்டு வழக்கு தாக்கல் செய்வதாக மிரட்டி வருவதாக புகார் கொடுத்தாரா என்றால் இல்லை. அது சம்பந்தமாக பழைய நகர சேர்மென் பழனிவேல் ராஜனும், கலையரசனும் என்னிடம் பஞ்சாயத்து பேசினார்கள் என்றால் சரியல்ல.அவர்கள் என் உறவினர்கள் அதனால் எதிரியையும், அவரது அம்மாவையும் அழைத்து பேசினார்கள்.அதற்கு அவர்கள் பணத்தை திரும்ப கொடுத்து விடுவதாக தான் சொன்னார்கள்.

12) பஞ்சாயத்து பேசிய போது நான் எதிரியிடம் பண வரவு செலவு சம்மந்தமாக கொடுத்த அட்டையை திரும்ப வாங்கிக் கொண்டேன் என்றால் சரியல்ல.அதன் பிறகு தான் நான் எதிரி மீது வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல.28.12.2021 ஆம் தேதி என்னிடம் வாங்கிய பழைய கடனுக்கு 3000 ரூபாய் எதிரி வட்டி அனுப்பி உள்ளார் என்றால் நான் என் வீட்டில் வேலை செய்யும் நபருக்கு கூட சம்பளமாக போன் மூலம் தான் அனுப்புகிறேன். எதிரிக்கு ரூபாய் 6,00,000 பணமாக கொடுத்தேன் அதேபோல 03.02.2022 ஆம் தேதி எதிரி எச்.டி.எப்.சி வங்கி மூலமாக 2300 பணம் எனக்கு அனுப்பி இருந்தார் என்றால் எதிரி என்னிடம் காசோலை வாங்குவதற்கு முன்பாகவே வாங்கிய பணத்தை தான் திரும்ப கொடுத்திருப்பார்.

13) 01.01.2022 ஆம் தேதி ரூபாய் 600 எதிரி எச்.டி.எப்.சி வங்கி மூலமாக எனக்கு அனுப்பி இருந்தார் என்றால் கொடுத்திருப்பார் அதேபோல் 02.01.2022-ம் தேதி ரூபாய் 600 ஹெச்டிஎஃப்சி வங்கி மூலமாக எதிரி செலுத்தியிருந்தார் என்றால் கொடுத்து இருப்பார் அதேபோல் 05.02.2022ஆம் தேதி கூகுள் பே மூலமாக ரூபாய் ரூபாய் 2000 செலுத்தியுள்ளார் என்றால் பொய். 29.01.2022 ஆம் தேதி ரூபாய் 1000ம், 03.01. 2022 ஆம் தேதி ரூபாய் 2000ம், 3. 2.2022-ம் தேதி ரூபாய் 2000 ம் ,04.06.2022 ஆம் தேதி ரூபாய் 1500ம் ,04.04.2022-ம் தேதி ரூபாய் 600ம் ,31.12.2022 ஆம் தேதி ரூபாய் 600 ம் எதிரி எனக்கு கொடுத்துள்ளார்

என்றால் மேற்படி பணம் எல்லாம் இந்த வழக்கு தொடுப்பதற்கு முன்பு எதிரி என்னிடம் வாங்கிய பணத்தை திருப்பி செலுத்தி இருப்பார். எதிரி என்னிடம் நேரடியாக கொடுத்த பணத்தை சிட்டையில் வரவு வைத்துள்ளார் என்றால் என்னிடம் எதிரி நேரடியாக பணம் கொடுக்கவில்லை.

14) இது சம்பந்தமாக பஞ்சாயத்து பேசிய போது தான் சிட்டையை வாங்கி வைத்துக் கொண்டு காசோலையை திருப்பிக் கொடுக்காமல் வழக்கு தாக்கல் செய்து விட்டேன் என்றால் சரியல்ல. நான் கந்துவட்டி வசூல் செய்வதற்காக எதிரியை மிரட்டுவதற்காக இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி என்னிடம் எப்போது பணம் கேட்டார் என்றால் இது நீதிமன்றம் எல்லா விஷயங்களையும் சொல்ல முடியாது அவரது மனைவியை தேடுவதற்காக என்னிடம் கொஞ்சம் கொஞ்சமாக பணம் வாங்கினார் அவ்வாறு கொஞ்சம் கொஞ்சமாக வாங்கிய பணத்திற்கு தான் என்னிடம் காசோலை கொடுத்தார் என்றால் சரிதான்.பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

Taken down before me in Open Court, and read over to the witness and admitted by the deponent to be correct.

NALLA KANNAN M Digitally signed by NALLA KANNAN M Date: 2025.10.16 18:33:40 +0530

**Judicial Magistrate,**
**Bodinayakanur.**